**DVC.12/2022**

**ம.சா.1 மாலதி**

1 முதல் 4 எதிரிகள் எதிர்மனுதார்கள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

01. 10.01.2022 ம் தேதி பஞ்சாயத்து செய்து வீட்டுக்குள் விட்டார்கள் என்று மனுவில் சொல்லியுள்ளேன். யார் யார் பஞ்சாயத்து செய்துள்ளார்கள் என்றால் ஊர்காரர்கள். அவர்கள் பெயர் என்ன என்றால் முன்னாள் சேர்மன் கிருஷ்ணகுமார். 10.01.2022 ம் தேதியே என் வீட்டுக்கு சென்றேனா என்றால் இல்லை மறுநாள் தான் சென்றேன்.

02. மாறுநாள் சென்றேன் என்ற விவரத்தை மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மனுவில் நான் சொல்லவில்லை. எதிரிருரையில் எதிர்மனுதார்கள் இந்த விவரத்தை சொல்லியுள்ளதால் அதற்கு போட்டிகாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல.

03. பொதுவாக கணவர் இறந்துவிட்டால் 7 வது நாள் தான் பிறந்த வீட்டுக்கு அழைத்து சென்று திரும்ப அழைத்து கொண்டு விடுவார்கள் என்பது மரபு என்றால் ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு வழக்கம். பெண்ணகோணத்தில் மறுநாளே அழைத்து செல்வது மரபு என்றால் எனக்கு தெரியாது.

04. 1 ம் எதிர்மனுதாரர் இவர் தங்கி இருந்த வீட்டில் மதுவிற்றததால் தான் நான் பெரம்பலூரில் தங்கி இருந்ததாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். அது மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு மனுவில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர் மது விற்ற வீடு எங்கு உள்ளது என்றால லப்பைக்குடிகாடு.

05. பெண்ணகோணத்தில்தான் வீடு கணவரின் இறுதி சடங்கும் அந்த வீட்டில் நடந்தது என்றால் சரிதான். என் கணவர் பிராந்தி விற்பதற்கான அனுமதி வைத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பிராந்தி விற்பனை தொழிலை என் கணவர் தொடர்ந்து செய்து வந்தார் என்றால் இல்லை.

06. என் கணவர் மதுபாட்டில்கள் பெட்டி எடுத்து வரும்போது விபத்து நடந்து இறந்தார் என்றால் சரிதான். பெரம்பலூருக்கு வந்து நான் எப்போது வந்து தங்கினேன் என்றால் 4,5 வருடங்களுக்கு முன்பு தங்கினேன். என்னுடைய பொருட்களை எடுத்து கொண்டு வந்து வாடகை வீட்டில் தங்கினேன் என்றால் இல்லை.

07 கட்டில், மெத்தை மட்டும் தான் எடுத்துவந்தேன். நான் கலெட்டரிடம் மனு கொடுத்தபோது நானும் எழுதிகொடுத்தேன். எதிர்மனுதார்களும் எழுதிகொடுத்தார்கள். நான் எழுதிகொடுத்த பதிலில் திருமண தேதி 13.02.2013 என்று கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம்.

08. ராகவி ஜீவல்லரி ரசீது என்பது நாங்களாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த ரசீதில் கடைகாரர் கையொப்பம் இல்லை சீல் மட்டும் தலைப்பில் உள்ளது என்றால் நகை கடையில் அவ்வாறு தான் கொடுத்தார்கள். அதுபோல் ஒரு நகை கடையே இல்லை என்றால் சரியல்ல.

09. அந்த நகை கடைகாரரை நான் சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் ஆமாம். பாத்திர ரசீதில் ஜீஎஸ்டி என்று குறிப்பிடபட்டுள்ளது. ஆனால் 2014ம் ஆண்டு நடைமுறையில் இல்லை என்றால் நான் சமூக நலத்துறையில் அந்த ரசீதை தாக்கல் செய்த போது சீலுடன் தாக்கல் செய்ய சொன்னதால் அந்த கடையில் போய் கேட்டபோது தற்போது இந்த சீல்தான் உள்ளது என்று போட்டு கொடுத்தார்கள்.

10.சமூக நலத்துறையில் சீல்போட்டு வாங்கி வரசொல்லி குறிப்பாணை வாங்கிவரசொன்னார்களா என்றால் இல்லை. லட்சுமி ஸ்டோர் உரிமையாளர் மூலம் அந்த சீல் தற்போது கேட்டததால் தான் போட்டு கொடுத்ததாக அவர் மூலம் நிரூபிக்கிறேனா என்றால் ஆமாம். நகை அடமான ரசீது என் கணவர் பெயரில் உள்ளது. 05.03.2016 என்று தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11.நானும் எனது கணவரும் நகையை அடமானம் வைத்ததற்கு எதிர்மனுதாரர்கள் பொறுப்பு அல்ல என்றால் என் கணவர் மட்டும் வைக்கவில்லை. என் கணவரும் அவர் அப்பாவும் சேர்ந்து வைத்தார்கள். அவர் அப்பாவும் சேர்ந்து வைத்ததற்கு ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை.

12. அந்த சமயத்தில் என் கணவர் பெயரில் மட்டும் தான் வங்கி கணக்கு இருந்தது. அவர் அப்பா பெயரில் வங்கி கணக்கு இல்லை. அந்த சமயத்தில் என் கணவரின் அப்பா பெயரில் வங்கி கணக்கு இல்லை என்பது எனக்கு நன்றாக தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் வைத்து செலவு செய்ததற்கு எதிர்மனுதார்கள் மீது தற்போது குற்றம் சாட்டுகிறேன் என்றால் சரியல்ல.

13. நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு TN 46 X0873 என்ற இரு சக்கர வாகணத்தை என் கணவர் அப்போதே அஜித்குமார் என்பவருக்கு விற்று அவர்

பெயருக்கு பதிவு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் அப்போது மாற்றி கொடுத்தது எனக்கு தெரியாது. என் கணவர் என் பெயரில் தான் உள்ளது என்று சொன்னார்.

14.இன்னொரு இரு சக்கர வாகணம் என் கணவர் விபத்தான வாகணம் என்றால் சரிதான். அதை பற்றியும் எதிர்மனுதார்களுக்கு எதுவும் தெரியாது என்றால் அந்த வண்டி அவர்களிடம் தான் இருக்கிறது.

15. நான்கு சக்கரவாகணத்தின் ஆர்சி புக் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பேங் ஸ்டேண்மெண்டில் உள்ள யார் கட்டியது என்றால் என் கணவர்தான் கட்டினார். அதற்கான ரசீதிகளை என் கொழுந்தனர் வாங்கி சென்றுவிட்டார். பணம் யார் கட்டியது என்ற விவரம் அந்த நிறுவணத்தில் இருக்கும் என்றால் சரிதான்.

16. நான்கு சக்கர வாகணத்தை நான் தான் வைத்துள்ளேன் என்றால் என்னிடம் இல்லை. என் கணவருக்கு அவருடைய அம்மா, செல்லம் என்பவரும் வாரிசுதான் என்பது சரிதான். நான்கு சக்கர வாகணத்தை நானே வைத்துக்கொள்ள வேண்டும் என்பதாதல் எதிர்மனுதார்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 20.02.2022ம் தேதி எதிர்மனுதார்கள் வீட்டிற்கு யார்யாருடன் சென்றேன் என்றால் என் உறவிணர்கள் நீலகண்டன், சிவகுரு, ராஜேந்திரன், தர்மராஜ், சேகர், ரவிசந்திரன், சிவகுரு என்பவர் வழக்கறிஞரா என்றால் இல்லை.

17. நான் மேற்படி நபர்களுடன் சென்றபோது அந்த ஊரில் உள்ள பெரியமனிதார்களை யாரையாவது பார்த்து பேசினோமா என்றால் இல்லை. நாங்கள் சென்றது யார்காவது தெரியுமா என்றால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு தெரியும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது.

18. நான் சொன்ன தேதியில் அங்கு செல்லவில்லை என்றாலும் அவ்வாறு சென்று இருந்தால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் பெயர்கள் தெரிந்திருக்கும். ஊர் பெரியவர்களை வைத்து பேசியிருப்போம் என்றால் பெயர் தெரியாது. பக்கத்தில் இருந்தவர்கள் வந்து பார்த்தார்கள். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் அளித்தேன். எந்த தேதியில் அளித்தேன் என்றால் 24.02.2022. 19.20ம் தேதி நடந்த சம்பவத்திற்கு 24ம் தேதி புகார் அளித்தேனா என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்யவில்லை. இதற்காக போலீசார் மீது நான் ஒரு வழக்கு தொடுத்துள்ளேனா என்றால் சரிதான்.

20. வழக்கு தொடுத்த பிறகாவது போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. போலீசார் பெண்ணகோணத்திலும் வயலூரிலும் விசாரணை செய்து வயலூர் முன்னால் செயலர் ராஜசேகரன் மற்றும் எங்கள் உறவினர்கள் 10.01.2022 ம் தேதி பெண்ணகோணத்தில் கிருஷ்ணகுமாரிடம் பஞ்சாயத்து பேசினார்கள் என்றாலும் அதில் 4,00,000/- நஷ்ட ஈடு தருவதாக ஒப்புக்கொண்டதாகவும் அதற்கு எங்கள் தரப்பினர் மறுத்துவிட்டு வந்தார்கள் என்றாலும் இல்லை.

21. போலீசார் விசாரணையில் இந்த வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததால் நான் போலீசார் மீது போட்ட மனுக்களை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது என்றால் சரியல்ல. நான் போட்ட மனுக்களை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது என்றால் அது எனக்கு தெரியாது. இதுபற்றி என் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

22. போலீசார் தாக்கல் செய்த வாக்குமூலம் உண்மை என்பதால் அதன் மீது எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது உண்மையாக இருந்தால் மேல்நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் இல்லை. 10.01.2022 ம் தேதி பிறகு 1ம் எதிர் மனுதார் சுயமாக சம்பாதித்த சொத்தில் எந்த வில்லங்கமும் செய்யகூடாது என்று வாலிகண்டபுரம் சார்பதிவாளருக்கு வழக்கறிஞர் மூலம் நோட்டிஸ் அனுப்பினா என்றால் சரிதான்.

23. எதிர்மனுதார்கள் அவர்களது மகனை பரிகொடுத்ததில் இருந்து அமைதியாக தான் இருந்தார்கள். நான் தான் முதலில் வழக்கு என்று ஆரம்பித்தேன் என்றால் எதிர்மனுதார்கள் தான செட்டிமெண்ட் செய்தபிறகு தான் நான் நோட்டிஸ் அனுப்பினேன். 28.01.2022 ம் தேதி தான் தானசெட்டிமெண்ட் செய்தார்கள். ஆனால் நான் நோட்டிஸ்சை 13,14 ம் தேதியில் அனுப்பிவிட்டேனா என்றால் நான் அந்த தேதியில் அனுப்பவில்லை.

24. 28.01.2022 ம் தேதிக்கு முன்பு சார்பதிவாளருக்கு நான் எநத நோட்டிஸ் அனுப்பவில்லை என்றால் சரிதான். 28.01.2022 ம் தேதிக்கு பிறகு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் சார்பதிவாளரின் எதிர்மனுதார்ராக சேர்த்து உள்ளேன் என்றால் சரிதான். அது அசல் வழக்கு எண்.44/2022 –ல் பெரம்பலூர் சார்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது என்றால் சரிதான்.

25. இந்த வழக்கில் நான் நோட்டிஸ் கொடுத்த பிறகு சார்பதிவாளர் தான செட்டில்மெண்ட் செய்துள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இந்த குடும்பத்தில் வழக்கு என்று ஆரம்பித்தது நான் தான் என்றால் சரியல்ல.